BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

E - ISSN: 3139 -1893

An international open access, peer- reviewed, refereed journal

# கரிசல் நில கிடைமாட்டுக் கீதாரியின் தொழில்சார் உயிரினத்தேர்வு

# Professional selection of the karisal land Keethari Cattle

**ஜீ. ஜெனித் குமார்**

முனைவர் பட்ட ஆய்வாளர், முதுகலைத் தமிழ்த்துறை, தமிழாய்வு மையம்,

அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி, தமிழ்நாடு, இந்தியா

ஆய்வு நெறியாளர் : **முனைவர் ந. அருள்மொழி**

இணைப்பேராசிரியர், முதுகலைத்தமிழ்த்துறை, தமிழாய்வு மையம்

அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி, தமிழ்நாடு, இந்தியா

**J. Jenith Kumar**

Research Scholar in Tamil, PG and Research Department of Tamil, Ayya Nadar Janaki Ammal College (Autonomous), Sivakasi, Tamilnadu, India

Guide: **Dr. N. Arulmozhi**

Associate Professor, PG and Research Department of Tamil, Ayya Nadar Janaki Ammal College (Autonomous), Sivakasi, Affliated with Madurai Kamaraj University.

**Abstract**

Humans live dependently on living things. Living things have also provided some jobs to humans. In this way, the cattle based industry is also significant. In individual human life, they lived by living with other living things, and doing jobs accourding to the land they live on and eating what they get. They also live as one living being with cattle. This lifestyle creates a unique ethnic group, identity and ethnic Characteristics. The nomadic Keetharis live a life of wandering for grazing. They live in a structured lifestyle based on cattle that depend on nature. The problem of the study is to understand and understand the varity of cattle breeds that are their livelihood. Their characteristics and the problems of Modern changes through field study.

**Keywords:** Keethari, Khidai, Tiger pond, Native cattle, Soil Resources, Natural Fertilizer, Jallikattu, Grazing, Agriculture.

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதர்கள் உயிரினங்களைச் சார்ந்து வாழ்கின்றனர். உயிரினம் சார்ந்த வாழ்க்கை சில தொழில்களையும் மனிதர்களுக்கு வழங்கி இருக்கிறது. அவ்வகையில் கிடைமாடு சார்ந்த தொழிலும் குறிக்கத்தக்கது. தனிமனித வாழ்வில் அஃறிணை உயிர்களுடனான வாழ்வியலோடு தாம் வாழும் நிலத்திற்கேற்பத் தொழில்களைச் செய்து கிடைத்தவற்றை உண்டும் வாழ்ந்து வருகின்றனர். கால்நடைகளோடு தாமும் ஒரு உயிரினமாகக் கலந்து வாழ்கின்றனர். இத்தகு வாழ்க்கைமுறை தனித்த இனக்குழு அடையாளத்தையும் இன இயல் பண்புகளையும் தோற்றுவிக்கின்றன. கிடைமாட்டுக் கீதாரிகள் மேய்ச்சலுக்காக அலைந்து திரிகின்ற வாழ்வினை வாழ்கின்றனர். இயற்கை சார்ந்தும் கால்நடைகளைச் சார்ந்தும் கட்டமைக்கப்பட்ட வாழ்வியல் தளத்திலேயே வாழ்ந்து வருகின்றனர். தங்களின் வாழ்வாதாரமான மாட்டு இனங்களின் வகைமையையும் அவற்றின் தன்மைகளையும் இன்றைய கால மாற்றங்களின் சிக்கல்களையும் களவழிக் கற்றல் வாயிலாக ஆய்ந்தறிந்து புலப்படுத்துவது ஆய்வின் சிக்கலாக அமைகின்றது.

**திறவுச் சொற்கள்** :

கீதாரி, கிடை, புலிக்குளம், நாட்டு இன மாடுகள், மண்வளம், இயற்கை உரம், ஜல்லிக்கட்டு, மேய்ச்சல், வேளாண்மை

**முன்னுரை**

கரிசல் நில மக்களின் சமூக வாழ்விலும், பண்பாட்டிலும் பொருளாதார வளர்ச்சியிலும் கால்நடைகள் முக்கியப் பங்காற்றி வருகின்றன. கால்நடைகளைக் கொண்டு கிடையமைத்து வாழ்கின்ற மேய்ச்சல் இனக்குழுவின் தலைவர் கீதாரி. கிடை அமைக்கக் கால்நடைகளை ஓட்டிச் செல்லுகின்ற ஊர், கால நிர்ணயம், திசை முதலானவற்றை அறிந்து இடையர்களை ஒருங்கிணைத்துக் கிடையமைத்துக் கூலியைப் பெற்றுத் தருவதும் கீதாரியின் பணி. கால்நடைகளைப் பராமரிப்பதில், மேய்ச்சலில் ஏற்படுகின்ற சிக்கல்களையும் கீதாரியே எதிர்கொள்கின்றார். ‘வரப்போ தலையணை, வாய்க்காலோ பஞ்சு மெத்தை’ எனும் மொழிக்கேற்பக் கடினமான வாழ்க்கையைக் கீதாரிகள் வாழ்கின்றனர். தன்னுடைய அயராத உழைப்பாலும் தலைமைப் பண்பாலும் தம்மைச் சார்ந்துள்ள சக இடையர்களை வழிநடத்திச் செல்கின்றனர். கிடைமாடுகளை மேய்ப்பது என்பது மிகக் கடினமான செயல். கிடைமாடுகளின் கழிவுகளைப் பெற்றே கிடைமாட்டுக் கீதாரி இடையர்கள் இன்றளவும் வருவாய் ஈட்டி வாழ்ந்து வருகின்றனர். இக்கிடைமாட்டுக் கீதாரி இடையர்கள் தங்கள் கிடைக்காக மாடுகளைத் தேர்வு செய்வதையும், பராமரித்து வளர்ப்பதையும், பொருளாதாரத்தில் கிடைமாடுகளின் பங்கினையும் ஆய்ந்து அறியும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

**கரிசல் நில கீதாரியின் கிடைமாடுகள்**

மேய்ச்சல் வாழ்வில் கீதாரியுடன் திரிந்து பராமரிக்கப்படும் மாடுகள் கீதாரியின் கிடைமாடுகள். இம்மாடுகள் கிடை போட்டு மேய்க்கப்படும் நாட்டு மாடுகள். தமிழ்நாட்டில் மேய்ச்சல் நிலச் சமூகத்தினர் காலங்காலமாhக மரபு மிக்க நாட்டு மாடுகளின் இனத்தைக் காத்து வருகின்றனர். காங்கேயம், உம்பளச்சேரி, தேனி மலையாடு, புலிக்குளம், ஆலம்பாடி, பர்கூர் முதலான ஆறு வகையான நாட்டு மாட்டினங்களே தமிழ்நாட்டில் வளர்க்கப்பட்டு வருகின்றன. ஆலம்பாடி மாட்டினம் இன்றைய நிலையில் அழிந்துவிட்டது. புலிக்குளம் இனமாடுகள் அழிவின் விளிம்பு நிலையில் உள்ளன. புலிக்குள இனக் கிடைமாடுகள் தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பகுதிகளைப் பூர்வீகமாகக் கொண்ட ஒரு நாட்டு மாடு இனம். கரிசல் நிலப்பகுதிகளில் கிடைமாட்டுக் கீதாரிகளால் அதிக அளவில் பராமரிக்கப்பட்டு வருகின்ற நாட்டு மாட்டு இனம் புலிக்குளம் மாட்டு இனம். மேற்குதொடர்ச்சி மலையைச் சுற்றியுள்ள கரிசல் நிலப்பரப்பில் இவ்வகை மாடுகள் மேய்ச்சலுக்காகக் கிடையிட்டு வளர்க்கப்பட்டு வருகின்றன.



**எரிச்சநத்தம்- கிடைமாடுகள்**

மரபு மிக்க இம்மாட்டினத்தின் வளர்ப்பு, மேய்ச்சல் வாழ்வு முழுவதும் கிடைமாட்டுக் கீதாரிகளின் பண்பாட்டு அமைப்போடு தொடர்புடையது. தமிழர் மரபு சார்ந்த வீரவிளையாட்டான ஜல்லிக்கட்டு விளையாட்டிற்குத் தேவையான சீற்றம் கொண்ட காளைகளாகவும் இம்மாடுகள் வளர்க்கப்படுகின்றன. பெரும்பாலான மாடுகள் கிடைக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. காட்டு மாடு, கிடைமாடு, ஜல்லிக்கட்டு மாடு என்றெல்லாம் அழைக்கப்படுகின்றன. மிகு சீற்றம், நோய் எதிர்ப்புத்திறன், உழைப்புத்திறன் கொண்டவை.

**புலிக்குள இன மாட்டின் உடல் அமைப்பு, பண்புகள்**

புலிக்குளம் மாடுகள் தனித்துவமான பண்புகள் உடையவை. புலியினைக்; கூடத் தம் அடர்த்தியான கொம்பின் வலிமையால் குத்திக் கொன்றுவிடும் வலிமை பெற்றன. கிடை, ஜல்லிக்கட்டிற்காக வளர்க்கப்படும் மாட்டினம்.

சிவகங்கை மாவட்டம் மானாமதுரைக்கு அருகில் அமைந்துள்ளது புலிக்குளம். மானாமதுரையிலிருந்து சுமார் 16கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. புலிக்குளம் இன மாடுகள் என்று பெயர் வந்ததன் காரணம் பற்றிக் கீதாரி முத்துப்பாண்டி, ‘மேய்ச்சலின் போது நாட்டுமாடுகள் புலியைக் குத்திக்கொன்றதால் புலிக்குளம் என்று பெயர்’ பெற்றதாகக் கூறுகின்றனர். மேலும் காங்கேயம் இன மாடுகள் உயரத்தை விடச் சற்று குறைவு. இருப்பினும் காங்கேயம் இனமாடுகளின் பண்புகளோடு நெருங்கிய தொடர்புடையவை. பெரும்பாலான மாடுகள் சாம்பல் நிறத்தைக் கொண்டவை. அடர் சாம்பல் நிறம், கருமையும் சாம்பலும் கலந்த நிறம், வெளிர் சாம்பல் நிறம், மங்கலான வெண்மை நிறச் சாம்பல் நிறம் முதலான நிறங்களில் காணப்படுகின்றன. கூரிய கொம்பும், பெரிய திமிலும், சீறிப்பாயும் வீரியமும் மிக்க தோற்றமுடையவை. “கிடைமாட்டுப் பசுக்கள் 112 முதல் 114 செ.மீ உயரமுடையது. காளைகள் 117 முதல் 119 செ.மீ உயரம் கொண்டவை. காளையின் எடை சுமார்; 300 கிலோ, பசுவின் எடை 225 முதல் 250 கிலோ” (தகவலாளர் : த.திருநாவுக்கரசன், கால்நடை மருத்துவர், மதுரை) என்று கூறும் தகவல் அறிவியல் முறைமையில் கிடைமாட்டின் தோற்றத்தை அறியத் துணைநிற்கிறது. கடினமான தட்பவெப்ப நிலையையும் தாங்கும் ஆற்றல் வலிமை கொண்டது. இயற்கையிலேயே இந்நாட்டு இன மாடுகளுக்கு பாசமும் ரோசமும் சற்று அதிகமாகவே காணப்படுகின்றன. இம்மாடுகள் அதிக உழைப்புத் திறன் கொண்டவை.

புலிக்குளம் இன மாடுகள் காடுகள், மலை அடிவாரப் பகுதிகள், மேய்ச்சல் நிலப்பரப்புகள் எனப் பல்வேறுபட்ட பகுதிகளில் வெயில், மழை பாராது அலைந்து புற்களுடன் மருத்துவ குணமுடைய மூலிகைத் தாவரங்களையும் சேர்த்து மேய்கின்றன. எனவே, உறுதியான உடலமைப்பையும், நோய் எதிர்ப்புத்தன்மை மிக்க உடல் அமைப்பையும் பெற்றுள்ளன.

இம்மாடுகளின் கால்களும் தலையும் சராசரி நீளத்தில் காணப்படுவதால் நடுத்தர உடலமைப்பை உடையவை. ‘சண்டியர் மாதிரி கோபம் வரும் புலிக்குளம்’ என்று கூறும் மொழி, இம்மாட்டின் வீரத்தை விளக்கி நிற்கின்றன. இம்மாடுகள் தினமும் அரை லிட்டரிலிருந்து முக்கால் லிட்டர் அளவு மட்டுமே பால் தருகின்றன. இப்பாலில் சிறிதளவு கூடத் தண்ணீர் சேர்க்காமல் எடுத்துக்கொண்டால் பல்வேறு நோய்களுக்கு மருந்தாகும் தன்மையுடையதாம்.



**சரவணன் கீதாரியுடன் ஆய்வாளர் நேர்க்காணல்**

குறைவாகப் பால் தருவதினால் இம்மாட்டின் பால் விற்கப்படுவதில்லை. மூர்க்கக் குணம் கொண்ட இக்கிடைமாடுகள் நெருங்கிப் பழகியவர்களைத் தவிர வேறு ஆட்களை நெருங்க விடுவதில்லை. (கள ஆய்வுத் தகவலாளர் : சரவணக்குமார் கீதாரி, கிடை இடம் : எரிச்சநத்தம், விருதுநகர் மாவட்டம், 09.08.2025)

**மண்ணின் தன்மையை மேம்படுத்தும் கிடைகள்**

வேளாண் மேம்பாட்டிற்கு மிக முக்கியமானது மண்ணின் வளம். மண்ணின் தன்மையை வைத்துப் பயிர் உற்பத்தி நிர்ணயம் செய்யப்படுகின்றது. விவசாயிகள் மண்ணின் தன்மையை மேம்படுத்தக் கிடைபோடுதல், கால்நடை எரு, பயிர்க்கழிவு பயன்பாடு முதலான மூன்று முறைகளைப் பயன்படுத்தி மண்ணின் வளத்தை மேம்படுத்துகின்றனர். பெரும்பாலும் கிடையமைப்பதே நிலத்திற்கு அதிக பயன். கிடையமைப்பதினால் மண்ணுக்கு நுண்ணுயிர்ப் பெருக்கம், கரிமச்சத்து, ஈரப்பதத்தை நன்கு தக்கவைக்கும் திறன் அதிகரிப்பு முதலான பயன்கள் கிடைக்கின்றன.

ஆட்டு எருவில் 1.0% சாம்பல் சத்துக்களும் 0.9% தழை முதலானவையும் உள்ளன. ஆட்டுச்சிறுநீரில் 1.7% தழை, 2.0% சாம்பல் சத்துக்களும் அதிகமாக இருப்பதால் மண்ணின் அடர்வு, நீர்ப்பிடிப்புத்திறன், நயம், காற்றோட்டம் முதலானவை மேம்படுகின்றன. ஆட்டுக்கிடையினால் விளைநில உரிமையாளருக்கு அந்த ஆண்டே இலாபம் கிட்டும். மாட்டுக்கிடையினால் கிடையிட்ட மறுஆண்டு இலாபம் கிடைக்கும்.



**கிடைப்போட்டுள்ள நிலத்தின் உரிமையாளருடன் ஆய்வாளர்**

“ஆட்டுக்கிடை போட்டால் அந்த ஆண்டே லாபம், மாட்டுக்கிடை போட்டால் மறு ஆண்டு லாபம்” என்ற சொலவடை இன்றளவும் மக்கள் பயன்பாட்டில் காணப்படுவதை அறியமுடிகின்றது. ஆட்டுக்கிடை மண்ணின் கரிமச் சத்தை சமன்செய்கின்றது. மாட்டுக்கிடை 10 ஆண்டுகள் வரை பலன் கிடைக்கும் தன்மையுடையது. ஆடு, மாடுகளின் கழிவுகள் கிடைகளில் இரவில் தங்க வைப்பதினால் சாணமும் சிறுநீரும் மண்ணில் விழுந்து நேரடியாக நிலத்துடன் ஊடுருவி இயற்கை உரமாக மாறுகின்றன. இவ் இயற்கை உரம் மண்ணின் வளம் அதிகரிக்கும் முதன்மைப் படியாகச் செயல்படுகின்றது. மாட்டுச் சாணம் வேளாண் விளை நிலங்களின் மண்வளத்தைச் செறிவூட்டுகின்றன. நிலங்களின் பயிர் வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்கள் இம் மாட்டுச் சாணத்திலும், சிறுநீரிலும் காணப்படுகின்றன. நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் முதலான சத்துக்களுக்கு மூலமாகவும் அமைகின்றன. கிடைமாடுகளால் மண்ணின் செயற்கை உரத்தைக் குறைத்து இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க இயலும்.

கிடைமாடுகளின் பால் குறைந்தளவாயினும் நோய் எதிர்ப்பு சக்தி மிக்கதாகும். மேலும் கிடைமாடுகள் நாட்டுமாடுகள் இனங்களைக் காக்க உதவுகின்றன.

**நிறைவுரை**

இயற்கைச் சூழல்களை சார்ந்தும் கால்நடைகளைச் சார்ந்தும் அலைந்து திரிகின்ற வாழ்வினை மேற்கொள்கின்றனர் கிடைமாட்டுக் கீதாரிகள். தமிழர்களின் மரபு சார்ந்த நாட்டு மாடுகளின் இனங்களை இன்றளவும் பாதுகாத்து வருகின்றனர்.; கிடை மாடுகளின் கழிவுகளிலிருந்து கூலியாகப் பெறப்படுபவை கொண்டு வாழ்கின்றனர். மாடுகளையே தங்களின் உயிராக நேசித்து வருகின்றனர். இவர்கள் இல்லையேல் இன்றைய சூழலில் நாட்டுமாடுகளே இல்லை என்ற நிலையில் தான் உள்ளன. மேய்ச்சல் நிலங்கள் குறைவு, மேய்ச்சலுக்குத் தடை, செயற்கை உரங்கள் தயாரிப்பு முதலான பல்வேறு காரணங்களால் அழிம்பின் விளிம்புநிலையில்தான் கிடைமாடுகள் உள்ளன. கீதாரிகளின் வாழ்வாதாரமும் நாளுக்கு நாள் அழிவை நோக்கிச் செல்கின்றன. இதனால் அடுத்த தலைமுறை மக்கள் இத்தொழிலை மேற்கொள்ள முன்வருவதில்லை. இருப்பினும் நாட்டுமாடுகளை அழிவிலிருந்து தங்களால் முடிந்த அளவிற்கு இன்றைய தலைமுறை வரை கீதாரிகள் பாதுகாத்து வருகின்றனர். கரிசல் நிலக் கீதாரிகள் தங்கள் கிடைக்காக நாட்டுமாடுகளை தேர்ந்தெடுப்பதன் அவசியமும், அவற்றின் தோற்றம், பயன்கள் முதலானவற்றைக் கீதாரிகளிடம் களஆய்வுப் பணி மேற்கொண்டதன் வாயிலாக அறிந்து உற்று நோக்க ஆய்வு இடமளிக்கிறது.

**துணை நின்றவை**

1. ரவீந்திரன், பெ., “வித்தி வான் நோக்கும் வியன்புல” (கரிசல்-வாழ்வு,பண்பாடு,இலக்கியம்)., செம்முல்லை பதிப்பகம், சிவகாசி, முதற்பதிப்பு 2022.
2. கள ஆய்வுத் தகவலாளர்கள்: சரவணன் கீதாரி, செல்வக்குமார் (கிடைமாட்டு இடையர்), முத்து பாண்டி கீதாரி., கள ஆய்வின் போது கிடை இடங்கள் : எரிச்சநத்தம், விருதுநகர், மதுரை.
3. த.திருநாவுக்கரசன், கால்நடை மருத்துவர், மதுரை.